சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

மனு எண். எம்.சி.ஓ.பி.163/2017

RW - 1

2025 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 26 ம் நாள் வெள்ளிக்கிழமை (1989 ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி) திரு.எம்.மணிகண்டன், எம்.ஏ., எம்.எல்., சார்பு நீதிபதி, பொள்ளாச்சி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | கோபாலகிருஷ்ணன் |
| க.பெ. (அ) த.பெ. | முத்துசாமி |
| வயது | 50 |
| முகவரி | கிணத்துக்கடவு |

**முதல் விசாரணை**

நான் Indian Products Private Limited (Jayanthi Herbs and Spice) என்ற நிறுவனத்தில் நான் உதவி மேலாளர் HR ஆக பணியாற்றி வருகிறேன். எனக்கு நிறுவனத்தில் கொடுக்கப்பட்ட அங்கீகார கடிதத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன், அது சாட்சி சான்றாவணம் 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அது ஆட்சேபணைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. எனக்கு நிறுவனத்தில் கொடுக்கப்பட்ட அடையாள அட்டை சாட்சி சான்றாவணம் 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அது ஆட்சேபணைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. என்னுடைய ஆதார் அட்டையின் நகல் தாக்கல் செய்யப்படுகிறது, அது சாட்சி சான்றாவணம் 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கில் கண்ட விபத்தில் இறந்து போன லோகநாதன் எங்களது நிறுவனத்தில் என்னவாக பணிபுரிந்தார் என்று

கேட்டால் டெக்னிசனாக பணிபுரிந்தார் அவருடைய பணியானது நிரந்தர பணியாகும். மேற்கண்ட லோகநாதனுக்கு வழங்கப்பட்ட அடையாள அட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படுகிறது, அது சாட்சி சான்றாவணம் 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அவர் எங்களது நிறுவனத்தில் இறுதியாக ரூ.18,210/- மாத சம்பளம் பெற்று வந்தார். என்னிடம் காட்டப்படும் மசா8 ஆவணமானது எங்களது நிறுவனத்தில் வழங்கப்பட்ட லோகநாதனின் சம்பள சான்று ஆகும். மேலும் அவருக்கு வேலையின் அடிப்படையில் Performance incentive ஆக 2016-2017 ஆண்டில் ரூ.27,600/- பெற்றார். அது சாட்சி சான்றாவணம் 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அது ஆட்சேபணைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.

<u>குறுக்கு விசாரணை</u>

எனக்கு கொடுக்கப்பட்ட அங்கீகார கடிதத்தில் மேலே Jayanthi Herbs and Spice என குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் மேலே Indian Products Private Limited என குறிப்பிடப்படவில்லை. Director Seal ஆனது எக்ஸ் 1 ல் வைக்கப்பட்டதா என்றால் இல்லை. இறந்து போன லோகநாதன் எப்போது சேர்ந்தார் என கேட்டால் 14.10.2011 ல் எங்களது நிறுவனத்தில் சேர்ந்தார். என்னிடம் காட்டப்படும் அடையாள சான்றில் Date of issue என என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்று கேட்டால் 01.01.2014 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சம்பள சான்றில் மேலே Jayanthi Herbs and Spice என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட சாசாஆ 8 ஆவணத்தில் 2017-2018 நிதியாண்டி

முடிவில் தான் Performance incentive Will be payable என கண்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள சாசாஆ 5 ஆவணத்தில் 2015-2016 ஆண்டுக்கான Performance incentive என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் ஆகவே அந்த ஆவணமானது எங்களது நிறுவனத்தில் இறந்து போன நபருக்காக தயாரிக்கப்பட்ட ஒன்று என்றால் சரியல்ல. எங்களது நிறுவனத்தில் இருந்து வருமான வரித்துறைக்கு ரிட்டன்ஸ் தாக்கல செய்யப்படும் என்றால் சரிதான். 2016-2017 ஆண்டில் இறந்து போன நபருக்கு மாத சம்பளமானது வங்கி மூலம் தான் பரிமாற்றம் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த கணக்கு விவரங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். எங்களது நிறுவனத்தில் வேலை செய்யும் அவர்களுக்கு வருகை பதிவேடு பராமரிக்கப்படுகிறதா என்றால் பையோமேட்ரிக் சிஸ்டம் எங்கள் நிறுவனத்தில் நடைமுறையில் உள்ளது. இறந்து போனவரின் அடையாள அட்டையில் அவர் டெக்னிசன் என்று குறிப்பிடவிலலைஎன்றால் சரிதான். இறந்துபோனவரின் சம்பள சான்று விவரங்கள் நீதிமன்றத்தில்ர ஒப்படைக்க முடியுமா என்றால் முடியும்.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)**

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி

பொள்ளாச்சி